DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு மே மாதம் வெள்ளிகிழமை 30ம் நாள் சாட்சியாகிய பரிமளா என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பெஞ்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பரிமளா | வயது | 65 |
| க/பெ. | முனுசாமி | இனம் | பெண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | இல்லத்தரசி |
| சமயம் | | தாலூக்கா | |

**D.V.C.7/2019**

(எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர். எதிர்மனுதாரர் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).

**<u>குறுக்கு விசாரணை 30.05.2025 ம.சா.2</u>**

1. எனது முதன்மை சாட்சியத்தில் உள்ள விவரங்களை நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். முதன்மை சாட்சியத்தில் தெரிவித்துள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. 1வது எதிர்மனுதாரருடன் அவரது குடும்பத்தார் சேர்ந்து வசித்து வரவில்லை என்றால் சரியல்ல. கூட்டுக் குடும்பமாக இருந்தார்கள்.

2. எந்த தேதியில் வேலூர் சமூக நல அலுவலகத்தில் புகார் கொடுத்தோம் என்றால் 2015ம் வருடம். அதன் பிறகு நாங்கள் எதிர்மனுதாரர் வீட்டிற்கு செல்லவில்லை என்றாலும், எதிர்மனுதாரர் யாரும் எங்கள் வீட்டிற்கு வரவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர், மனுதாரரை அடித்ததாக தெரிவித்துள்ளதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

3. எனது மகளை புருசோத்தமன் வீட்டைவிட்டு தள்ளியதாக தெரிவித்துள்ளதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். புருசோத்தமன் யார் என்றால் 1வது எதிர்மனுதாரரின் சகோதரர். தாமஸ் என்பவர் எனது மகளை அசிங்கபடுத்தியதாக தெரிவித்துள்ளதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். 2015ம் வருடத்திற்கு பிறகு எங்களுக்குள் பேச்சுவார்த்தை இல்லை என்கிறபோது 29.06.2017ம் தேதி வளைகாப்பிற்கு எனது மகள் சென்றிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

4. கற்பனையாக, பொய்யாக தெரிவித்துள்ளோம் என்றால் சரியல்ல. 2015ம் வருடத்திற்கு பிறகு எங்களுக்குள் பேச்சு வார்த்தை இல்லை என்கிறபோது 30.06.2017ம் தேதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாக தெரிவித்துள்ளது சரியல்ல. வளைகாப்பு நிகழ்ச்சி நடந்தபோது எனது மகள், எதிர்மனுதாரர் வீட்டில்தான் இருந்தார். எதிர்மனுதாரர், எனது மகளை அடித்து, தாலியை கழற்றியதாக தெரிவித்துள்ளதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

5. எனக்கு மொத்தம் எத்தனை குழந்தைகள் என்றால் 2 மகன்கள், 1 மகள். எனது மகன்கள் திருமணமாகி என்னுடன் வசித்து வருகிறார்கள் என்றால் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார்கள். M.C.12/2017 வழக்கில் மாதம் தலா ரூபாய் 10000/- எனது மகள், பேத்திக்கு வழங்க உத்தரவிடப்பட்டு அந்த தொகையை எதிர்மனுதாரர் செலுத்தி வருகிறார் என்றால் எனது மகள் வங்கி கணக்கில் இருந்து எடுத்த பணத்தை அனுப்பியுள்ளதாக நாங்கள் நினைத்துக்கொண்டுள்ளோம். நான் எதிர்மனுதாரர் எனது மகளின் வங்கி கணக்கில் இருந்து பணம் எடுத்தற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளோம். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளோம்.

6. 1வது எதிர் மனுதாரர் சேர்ந்து வாழ கோரி ராணிப்பேட்டை கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த 1/2024 வழக்கு 25.09.2024 தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த உத்தரவுக்கு பிறகு 1வது எதிர்மனுதாரர் எனது மகளுக்கு சேர்ந்து வாழ கடிதம் அனுப்பினார் என்றால் எனக்கு தெரியாது. எனது மகளின் மூக்கில் உள்ள சைனஸ் பிரச்சனைக்காக அறுவை சிகிச்சை செய்யப்பட்டதாக மருத்துவ சான்றில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சைனஸ் பிரச்சனை மற்றும் 1வது எதிர்மனுதாரர் அடித்ததால் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

7. 1வது எதிர்மனுதாரர் இரண்டாவது திருமணம் செய்து கொண்டதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. 2வது திருமணம் செய்து கொண்டதாக கேள்விப்பட்டோம். எனது மருமகனின் நிலம் சம்மந்தமான ஆவணத்தை ராணிப்பேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக எனது முதன்மை சாட்சியத்தில் தெரிவித்துள்ளது தவறு என்றால் சரியல்ல.

8. 2015ம் வருடத்திற்கு பிறகு எதிர்மனுதாரர் குடும்பத்துடன் தொடர்பு இல்லை என்கிறபோது 2017ம் வருடம் வளைகாப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டதாக

தெரிவித்துள்ளது தவறு என்றால் சரியல்ல. எனக்கு வழக்கில் தெரிவித்துள்ள சங்கதிகள் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது மகள் சொல்லித்தான் தெரியும். எனது கணவர் ரயில்வேயில் பணிபுரிந்தவர் என்றால் சரிதான். எனது கணவரின் ஓய்வூதியம் நான்தான் பெற்று வருகிறேன் என்றால் சரிதான். நான் வசித்து வரும் வீடு எனக்கு சொந்தமானது என்றால் சரிதான். எனக்கு சம்மபவங்கள் நேரடியாக தெரியாது என்பதால் எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதால் சரியல்ல.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.